This question paper consists of **45** questions and **16** printed pages.

**16 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 45 வினாகள் உள்ளன.**

**Roll No.**
**பதிவெண்** | | | | | | | | | | | | |

**9082**

# TAMIL
# தமிழ்
# (237)

**Code No.**
**குறியீடு எண்** **70/S/O/TM**

**SET/பகுதி** **A**

**Day and Date of Examination** ..............................................................
*(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி)*

**Signature of Invigilators :** **1.** ..............................................................
*(தேர்வு மேற்பார்வையாளர்*
*கையொப்பம்)* **:** **2.** ..............................................................

UNNATI
EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

பொதுக்குறிப்புகள் :

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை *(Roll No.)* வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாகளின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாகளின் எண்ணிக்கையும் மொத்த் பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாகளும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
4. உங்களது வினாத்தாளின் எண் **70/S/O/TM** மற்றும் செட் **A** விடைத்தாளில் எழுதுங்கள்.



**UNNATI EDUCATION**
**9899-436-384: 9654-279-279**

# TAMIL
# தமிழ்
# (237)

காலஅளவு : 3 மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : 100

குறிப்பு :

(1) அனைத்து வினாகளுக்கும் விடையளிக்க.

(2) விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

## பகுதி அ

### பிரிவு அ: தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதி

(5 செய்யுள் + 9 உரைநடை = 14 மதிப்பெண்கள்)

**பின்வரும் வினாகளுக்கு விடையளிக்கவும்.** **14 × 1 = 14**

1. முதலில் வசனக்கவிதை எனச் சொல்லப்பட கவிதை பிற்காலத்தில் பெற்ற பெயரென்ன? 1

2. திருக்குற்றால மலையில் எவற்றிற்குப் பஞ்சமில்லை? 1

3. அ. இரகசியவழி என்ற நூலைத் தழுவி எழுதப்பட்ட நாடக நூல் என்ன? 1

   அல்லது

   ஆ. திருக்குறளின் அதிகாரங்கள் எத்தனை?

4. அ. கேளிர் என்பது யாரைக் குறிப்பதாக கணியன் பூங்குன்றனார் குறிப்பிடுகிறார்? 1

   அல்லது

   ஆ. உண்டி என்னும் சொல்லின் பொருள் என்ன?

5. அ. சுவைகள் எத்தனை வகைப்படும்? 1

   அல்லது

   ஆ. "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று கூறியவர் யார்?



UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

## பிரிவு – ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 6-7)**

அப்துல்கலாமின் உரை : ஒரு நாட்டின் செல்வம், மக்களின் செழிப்பு, உலக அரங்கில் உயர்ந்த இடம் ஆகியவை அந்நாட்டை வளர்ந்த நாடாகச் செய்யும். அந்த நாட்டின் செல்வ நிலையை அறிய பல அளவுகோல்கள் உள்ளன. நாட்டில் நடைபெறும் வர்த்தகமும் பொருளாதார வலிமையை ஓரளவு தெரிவிக்கும். நானும் என் நண்பர் ராஜனும் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேக்பாட்டு ஆய்வகத்தில் சில காலம் பணிபுரிந்தோம். ஹைதராபாத்தில் உள்ளது அந்த ஆய்வகம். அப்போது நான் மூன்று குடும்பங்களின் வாழ்க்கையைக் கவனித்தேன். அவர்களின் வாழ்க்கையைப் பற்றி உங்களுக்கும் சொல்கிறேன் கேளுங்கள். வெங்கட் என்பவர் ஒருவர் அவருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள் மூன்று பேருமே பட்டதாரிகள். பணிபுரிந்தும் வருகிறார்கள். அதே பகுதியில் குப்புசாமி என்பவரும் வாழ்ந்து வருகிறார். அவருக்கு மூன்று மகன்கள். மூன்று மகன்களில் ஒருவனை மட்டுமே அவரால் படிக்க வைக்க முடிந்தது. மூன்றாவது நபர் கருப்பன் ஆவார். கருப்பனுக்கு இரண்டு பெண்கள், ஒரு மகன் கருப்பனுக்கு முழு நேர வேலை கிடையாது. எனவே கருப்பனால் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியவில்லை. மூன்று குடும்பங்களின் நிலைமையையும் எண்ணிப் பாருங்கள். குறைந்த பட்ச வாழ்க்கை, வசதி, உடல்நலம் பேணுகின்ற அளவுக்கு வேலைவாய்ப்பு எல்லோருக்குமே கிடைக்க வேண்டும் இதுதான் ஒரு வளர்ந்த இந்தியா பற்றிய நம் கனவு இது தான்.

6. பின்வருவனற்றுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளி **2 × 1 = 2**

(i) எவை எல்லாம் ஒரு நாட்டை வளர்ந்த நாடாகச் செய்யும்?

(ii) அப்துல்கலாம் அவர்கள் குறிப்பிடும் மூன்று நபர்களின் பெயர்கள் என்ன?

(iii) அப்துல்கலாம் அவர்கள் பணியாற்றிய ஆய்வகம் அமைந்துள்ள இடம் எது?



**UNNATI EDUCATION**
**9899-436-384: 9654-279-279**

7. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1**

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகத்தில் பணியாற்றிய நண்பர் யார்?

(அ) ராஜன் (ஆ) வெங்கட்

(இ) குப்புசாமி (ஈ) கருப்பன்

8. பொருத்துக. **4 × 1 = 4**

(அ) மனிதருள் மாணிக்கம் – மகாத்மா காந்தி

(ஆ) இந்தியா 2020 – அமர்த்தியா சென்

(இ) நவகாளி பாதயாத்திரை – நேரு

(ஈ) பொருளாதார நிபுணர் – அப்துல்கலாம்

UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

9. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **2 × 1 = 2**

(i) இந்தியாவிலிருந்து எகிப்திற்குச் சென்ற சாயச் செடியின் பெயர் என்ன?

(அ) ஏலங்கள்

(ஆ) அவுரி

(இ) இறும்பூது

(ஈ) அவா

(ii) மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவரையும் பிற உறுப்பினர்களையும் நியமனம் செய்வது யார்?

(அ) உயர் நீதிமன்ற நீதிபதி

(ஆ) குடியரசுத் தலைவர்

(இ) பிரதம மந்திரி

(ஈ) மனித உரிமை முன்னாள் ஆணையர்



**UNNATI EDUCATION**
**9899-436-384: 9654-279-279**

## பிரிவு ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 10 – 11)**

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்று 2000 ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழன் எழுதி விட்டுச் சென்றான். இந்த 2000 ஆண்டுகளாக அந்த ஒரு குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமல் இருந்தது. காந்தியடிகளின் வாழ்வுதான் எடுத்துக்காட்டாக நின்றது. அன்று திருவள்ளுவர் உண்மையின் பெருமையினை உணர்ந்து உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப் பற்றியே தமிழகத்தில் பலருக்குத் தெரியாது. ஆனால், அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை கற்பனையாகவே நிற்கவில்லை ஓர் அரிய வாழ்வாக மலர்ந்தது. எத்தனையோ நம்பிக்கைகள் எவ்வெவ்வாறு தடுமாறும் நாட்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின்றன. ஆனால், அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டமாக இருக்கிறது என்பதை என்றும் தவறா நம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை அன்று மாலை அடங்கிய அந்தப் பெருவாழ்வு. இயற்கை, அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலியவற்றில் அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயனடைந்தவர்கள் மிகமிகச் சிலரே என்று எண்ணுகிறேன். காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகள், பொதுமக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே, பசியில்லாமல் உணவு விடுதிக்குச் சென்று உண்பதுபோல் கலையுணர்வு இல்லாமல் சினிமாவுக்குச் சென்று காண்பதுபோல், அன்பு இல்லாமல் திருமணத்திற்குச் சென்று ஆரவாரம் செய்வது போல, நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாக இருக்கிறார்கள். அதனால் தான் அந்தத் தூய உடல் வாடிய அன்று இரவே கொலையும் கொள்ளையும் தீயிடலும் துன்புறுத்தலும் தொடங்கச் சிலருக்கு மனம் வந்தது. ஆனாலும், அவர்களும் துயரக் கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும் பொழுது, அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரணம் அல்ல நெடுங்காலமாக நிலவிவரும் வெறியே காரணம் என்று தெரிகின்றது. தென்னாப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணையாக நின்று அவருடைய அன்பைப் பெற்றார்கள். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்னும் பழமொழியாலும் திருக்குறள் கருத்துகளாலும் தமிழ் மொழி அவருடைய போற்றுதலைப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத போது அவரே தமிழாசிரியராக இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகிறது.



UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

10. பின்வருவனற்றுள் எவையேனும் மூன்றனுக்கு விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. **3 × 1 = 3**

(i) உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் ________ எல்லாம் உளன்.

(ii) ________ஆண்டுகளாக உள்ள குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமலிருந்தது.

(iii) திருவள்ளுவர் ________ பெருமையினை உணர்ந்து எழுதினார்.

(iv) ________ என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டம்.

11. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக. **3 × 1 = 3**

(i) கற்பனையாக எழுதியது என்னவாக மலர்ந்தது?

(அ) மலராக (ஆ) வாழ்வாக

(இ) மாலையாக (ஈ) உண்மையாக

(ii) "ஞாயிறு வீசிய ஒளி" இதில் ஞாயிறு என்பது யாரைக் குறிக்கிறது?

(அ) திருவள்ருவர் (ஆ) காந்தியடிகள்

(இ) திருக்குறள் (ஈ) சட்டங்கள்

(iii) காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகள் யாருக்கு எட்டாதவை?

(அ) பொதுமக்கள் (ஆ) வழக்கறிஞர்கள்

(இ) துரோகிகள் (ஈ) மதவெறியர்கள்

(iv) எதன் பெயரால் கொள்கைகளை உணராமல் இருக்கிறார்கள்?

(அ) அன்பினால் (ஆ) கலையுணர்வால்

(இ) நாகரிகத்தால் (ஈ) பசியினால்



UNNATI EDUCATIONS
EK IRADAM UNNATI KI AUR
**UNNATI EDUCATION**
**9899-436-384: 9654-279-279**

***பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி.***

***(வினா எண்12)***

*தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுள் திருக்குற்றாலமும் ஒன்று. இவ்வூர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. அருவிகள் நிறைந்த ஊர். தேனருவி, செண்பக அருவி, ஐந்து அருவி, பழைய அருவி போன்று பல அருவிகள் இங்கு உள்ளன. இவ்வருவிகளில் நீராடி மகிழும் சுகுமே தனிதான். இத்தகு நீர்வளம் மிக்கது திருக்குற்றாலம்.*

*திருக்குற்றாலத்தில் உள்ள மலையின் வளத்தையும் சிறப்பையும் சொல்லழகும் பொருளழகும் நிரம்புமாறு திருக்குற்றாலக் குறவஞ்சி என்னும் இந்நூலை ஆசிரியர் படைத்துள்ளார்.*

*திருக்குற்றால மலையில் உள்ள ஆண் குரங்குகள் பல வகையான பழங்களைப் பறித்து மந்திகளுக்குக் கொடுத்து மகிழும் அப்பழங்களைத் தின்றும் சிதைத்தும் மந்திகள் விளையாடும். இவ்வாறு மந்தி சிந்தியப் பழங்களை வான் உலகில் வாழும் தேவர் கூட்டம் மிக வேண்டி விரும்பி கேட்கும். காடுகளில் வாழும் வேடர்கள் தங்கள் கண்பார்வையாலேயே உற்றுநோக்கித் தேவர்களை அழைப்பார்கள். வான் வழியாகச் செல்லும் சித்தர்கள் கீழிறங்கி இம்மலைக்கு வந்து உடலுக்கு நன்மை அளிக்கும் யோகங்கள் என்னும் சித்து வேலையைச் செய்வார்கள்.*

UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

12. *பின்வருவனற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளி.* **5 × 1 = 5**

(i) *தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்களுள் ஒன்று _____.*

(ii) *அருவிகள் நிறைந்த ஊர் எந்த மாவட்டத்தில் உள்ளது?*

(iii) *குற்றால மலையின் வளத்தையும் சிறப்பையும் பாடும் நூல் எது?*

(iv) *தேனருவி குற்றாலத்தில் இல்லை : சரியா? தவறா?*

(v) *மந்தி சிந்தியப் பழங்களை யார் வேண்டி விரும்பிக் கேட்பர்?*

(vi) *கண்பார்வையாலே உற்று நோக்கித் தேவர்களை அழைப்பது யார்?*

(vii) *யோகங்கள் என்னும் சித்து வேலையைச் செய்வபர்கள் யார்?*



**UNNATI EDUCATION**
**9899-436-384: 9654-279-279**

13. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1 × 1 = 1**

(i) நேரு சிறையிலிருந்த போது தன் மகள் இந்திரா காந்திக்கு எழுதிய மொத்தக் கடிதங்கள் எத்தனை?

(அ) 196 (அ) 186

(இ) 176 (அ) 166

(ii) சாதாரண மக்களின் துன்பங்களை மூடி மறைத்து விடுவது எது?

(அ) சர்வதேச அரங்கம்

(அ) பொருளாதாரப் புள்ளி விவரங்கள்

(இ) மக்கள் தொகை

(அ) வேலைவாய்ப்பு

பிரிவு இ (இலக்கணம்)

14. பின்வருவனற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு வேற்றுமை உருபைக் கண்டறிக. **1 × 1 = 1**

(i) மலையின் வீழ் அருவி

(ii) கத்தியால் வெட்டினான்

15. பின்வருவனவற்றுள் ஏதேனும் மூன்றினுக்கு இலக்கணக் குறிப்புத் தருக **3 × 1 = 3**

(i) தினந்தினம்

(ii) கமகம

(iii) செந்தமிழ்

(iv) நிறைந்த முகம்

16. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு கலைச்சொற்களை கண்டறிக. **2 × 1 = 2**

(i) INTERNET

(ii) PUNCHED CARD

(iii) COMPUTER



UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR
UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

17. பின்வரும் சொற்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு மூவிடப் பெயர்களை எழுதுக. **2 × 1 = 2**

(i) நாம் -

(ii) நீங்கள் -

(iii) தாங்கள்

(iv) நீயிர்

18. பின்வரும் சொற்களில் ஏதேனும் ஒன்றினைப் பிரித்து எழுதுக. **1 × 1 = 1**

(i) வாழுமுயிர்க்கு

(ii) பெருஞ்செல்வம்

பிரிவு ஈ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 19 – 20)**

காளீசுவரன் கானப்பேர் ஊரில் கோயில் கொண்டிருக்கும் போது இந்தப் பாண்டிய நாட்டை ஆண்டவன் வீரசேனன். இவனுக்குப் பழவினை வசத்தால் குழந்தை இல்லை. அதனால், இவனும் இவன் மனைவி சோம்னாங்கியும் சுவர்ணத்தால் ஒரு பிள்ளையைச் செய்து வைத்து அதைப் பார்த்துப் பார்த்துத் திருப்தி அடைகிறார்கள். சுவர்ண காளீசுவரனை வணங்கிவந்த இந்தத் தம்பதிகள் கோயிலை அடுத்த உருத்திரத் தீர்த்தத்தில் முங்கி முழுகி எழுகிறார்கள். சுவர்ணப் பதுமையோடு இறையருளால் அந்தச் சுவர்ணபுத்திரன் உயிர் பெறுகிறான். உடனே, இறையருளை நினைத்து அங்குக் கோயில் கொண்டிருந்த காளீசர் சுவர்ணவல்லி.

சோமேசர் சௌந்திரவல்லி யாவர்க்கும் கோயில்கள் எழுப்பித்து நைத்திய நைமித்திரி காரியங்களுக்கும் உற்சவாதிகளுக்கும் ஏராளமான நிபந்தனைகளை ஏற்படுத்திகிறான். இந்த இரண்டு பெருமாள்களை வணங்கி வாழ்த்துவதோடு திருப்தி அடையவில்லை. தன்னுடைய வழிபாடு தெய்வமாகிய சோமசுந்தரரையும் மீனாட்சியையும் தரிசித்து வணங்காமல் தினமும் அவன் உணவு உண்பதில்லை. காளீசர் கோயில்



UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

கட்டும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் போதும் தினமும் மதுரை வந்து திரும்ப முடியவில்லை. அதனால், உணவே அருந்தாமல் அமர்ந்திருக்கிறான். அந்தச் சமயத்தில் சோமசுந்தரனே அந்தப் பாண்டிய மன்னன் வீரசேனன் கனவில் தோன்றி, இனி நீ இங்கு வர வேண்டியதில்லை. நாமே அங்கு வந்து காளீசுரனுக்கும் சுவர்ணவல்லிக்கும் இடையிலே வீற்றிருப்போம் என்று சொல்லி மறைகிறான். விடிந்து எழுந்து பார்த்தால் குறிப்பிட்ட இடத்தில் ரிஷபத்தின் அடிச்சுவடுகள் தோன்றுகின்றன. அந்த இடத்திலே அவசரம் அவசரமாக மீனாட்சி சுந்தரேசருக்குக் கோயில் எழுகிறது. அங்கயற்கண்ணி தன்னோடும் அமர்ந்த ஆலவாய் அரன் இங்கு சுந்தரனாக எழுந்தருளுகிறார்.

19. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **3 × 1 = 3**

(i) பாண்டிய நாட்டை ஆண்ட அரசன் யார்?

(அ) காளீசுவரன் (ஆ) சுவர்ணபுத்திரன்

(இ) வீரசேனன் (ஈ) சோமேசர்

(ii) கானப்பேர் ஊரில் கோயில் கொண்டிருப்பவன் யார்?

(அ) காளீசுவரன் (ஆ) சுவர்ணபுத்திரன்

(இ) வீரசேனன் (ஈ) சோமேசர்

அல்லது

மதுரையில் வீற்றிருக்கும் இறைவனின் பெயர் என்ன?

(அ) காளீசர் (ஆ) சோமேஸ்வரர்

(இ) சுவர்ணபுத்திரன் (ஈ) சோமனாங்கி

20. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றுக்கு விடையளிக்கவும். **1 × 1 = 1**

(i) கட்டளைகளில் தருமம் என்று குறிப்பிடப்படுவது_________.

(ii) சந்திரகுப்த மௌரியரின் பேரன் _________ .



EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR
UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

21. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கனுக்குச் சரியா தவறா எனக் கண்டறிக. **4 × 1 = 4**

(i) அறம், பொருள், இன்பம், வீடு என்பன உறுதிப்பொருட்கள்.

(ii) கண்ணாகக் கொள்ளத்தக்கன எண்ணும் எழுத்துமாகும்.

(iii) பிறருக்குக் கொடுக்கக் குறைவது கல்வி

(iv) உயிர் எடுக்கும் பிறவிகள் ஒன்பது ஆகும்.

(v) அரசரும் தன் தீவினையால் செல்வத்தை இழந்து ஆண்டி ஆவார்.

(vi) முதுமைப் பருவத்தில் கற்றவன் வல்லவனாய்த் திகழ முடியும்.

(vii) நிறைகுடம் நீர் தளும்பல் இல்

(viii) கற்றலை விட வாசிப்பதே சிறப்பு

22. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும். **2 × 1 = 2**

(i) இந்திரனை வென்றவன் யார்?

(ii) பிறையும் சடையும் சூடியவர் யார்?

(iii) தமிழ்ச் சமூகத்தின் விளைச்சலுக்குத் தமிழ் எவ்வாறு பயன்படுகிறது?

(iv) வசிட்டர் யார்?

UNNATI EDUCATIONS

**பகுதி – ஆ (பிரிவு – அ)**

**(செய்யுள் 5 + உரைநடை 6 = 11 மதிப்பெண்கள்)**

23. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். **1 × 2 = 2**

(i) ஒடக்கூலி பெறும் முறை யாது?

(ii) ஆணின் அடக்குமுறைக்கு எந்தச் சமாதானம் சொல்லப்படுகிறது?



UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

24. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 40 முதல் 45 சொற்களில் விடையளிக்கவும். **1 × 3 = 3**

(i) செந்தமிழ் நாட்டின் சிறப்புகளை எத்துரைக்க?

(ii) பெரியோரின் சிறுபிழை எதனைப் போல் தெரியும்?

**பின்வரும் வினாக்களுக்கு 25 முதல் 30 சொற்களில் விடையளிக்கவும்.**

25. அசோகர் அமைத்த கல்விக் கூடங்கள் யாவை? **1 × 2 = 2**

26. (i) மகாத்மா காந்தி இந்தியர்களுக்காகத் தென்னாப்பிரிக்காவில் தொண்டாற்றியதை விளக்கு. **1 × 2 = 2**

(அல்லது)

(ii) வெள்ளைச்சாமியின் மனமாற்றத்திற்குக் காரணம் யாது?

27. அசோகனின் உளவிருப்பம் யாது? **1 × 2 = 2**

(அல்லது)

அபாகஸ் என்பது என்ன?

## பிரிவு – ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 28-29)**

தமிழுக்கும் அமுதம் என்ற பெயருண்டு. அத்தகைய இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நிகரானது. தமிழுக்கு நிலவு என்றும் பெயருண்டு. அத்தகைய இன்பத்தமிழ் எங்கள் சமூகம் விளைந்திட நீராகவும் திகழ்கிறது. தமிழுக்கு மணம் என்றும் பெயருண்டு. அத்தகைய இன்பத்தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊராகவும் இருக்கின்றது. தமிழுக்கு மது என்றும் பெயருண்டு. அத்தகைய இன்பத்தமிழ் உரிமை என்னும் செழிப்பான பயிருக்கு வேராகவும் நிற்கிறது.

தமிழ் எங்கள் இளமைக்குப் பாலாக இருந்து எங்களுக்கு ஆற்றலைத் தருகிறது. அத்தகைய இன்பத்தமிழ் சிறந்த தமிழ்ப் புலவர்களுக்கு வேலாக விளங்கி வீரத்தையும் அளிக்கின்றது. தமிழ் எங்கள் உயர்வுக்கு வானாகவும் உயர்ந்து நிற்கிறது. அத்தகைய இன்பத்தமிழ் எங்கள் அயர்வைப் போக்கி உற்சாகப்படுத்தும் தேனாகவும் திகழ்கிறது. தமிழ் எங்கள் அறிவுக்குத் தோளாக இருந்து துணை நிற்கிறது. அத்தகைய இன்பத்தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாளாகவும் இருக்கின்றது. தமிழ் எங்கள் பிறவிக்குத் தாயாகவும் இருந்து காக்கிறது. அத்தகைய இன்பத்தமிழ் எங்கள் வளம் நிறைந்த உள்ளத்தில் எரியும் தீயாகவும் பயன் தருகின்றது.



UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

28. தமிழுக்கு என்னென்ன பெயர்களுண்டு? 2

29. (i) இன்பத்தமிழ் எங்கள் மக்களுக்கு எவ்வாறெல்லாம் திகழ்கிறது 2

அல்லது

(ii) தமிழ்மொழி எத்தகைய பயன்களை எல்லாம் தருகின்றது?

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 30-32)**

செல்வந்தரிடம் பொருளைப் பெற விரும்பும் வறியவர் அடக்கத்துடன் பணிவாக நின்று பொருளைப் பெறுவர். அதுபோல ஆசிரியர் முன் பணிந்து நின்று கல்வி கற்க வேண்டும். அவ்வாறே கற்றவர் உயர்ந்தவர் ஆவார். அத்தன்மையில் நின்று கல்வி கற்காதவர் இழிந்தவராகக் கருதப்படுவர்.

ஆசிரியரிடம் தாழ்ந்து நின்று அடக்கத்துடன் கற்றவரே கற்றவர் ஆவார். அக்கல்விச் சிறப்பால் பிறரால் மதிக்கபெறும் உயர்வையும் பெறுவர். அவ்வாறு கற்பதற்கு வெட்கம் கொண்டவர் கல்வியை இழப்பர். அதனால் பிறரால் மதிக்கப்படாமல் இழிந்த நிலையினையும் அடைவர். தாய், தந்தை, ஆசிரியர், தெய்வம் என்போர் நால்வரும் வணங்கத்தக்கவர்கள். அவர்களுள் நல்லொழுக்கத்தையும் நல்லறிவையும் கற்றுத் தருபவர் ஆசிரியர். எனவே, அவரை வணங்கி நின்று கற்பதே சிறந்ததாகும்.

UNNATI
EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

30. (i) யாரைப் போல கற்க வேண்டும் 2

அல்லது

(ii) உயர்ந்தவர் யார்?

31. ஆசிரியரிடம் கல்வி எப்படி கற்க வேண்டும் 2

32. வணங்கத்தக்கவர்கள் யாவர்? 2

33. **பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை வரைக.** 3

அசோகர் – கடித வரலாற்றுச் செய்தி– ஜீவகாருண்யம் – கலிங்கப்போர் – ஆசியா கண்டம் – வாணிபத் தொடர்பு – பௌத்த மதம் – அசோகரின் கட்டளைகள் - சாரநாத் – சாலைகள்-சோலைகள்-கல்விக்கூடங்கள்.



UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

பிரிவு – இ – இலக்கணம்

34. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனை பிரித்தெழுதுக. 1 × 2 = 2

(i) ஏமாப்புடைத்து -

(ii) உலகின்புறல் -

35. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. 1 × 2 = 2

(i) இரட்டைக்கிளவி என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(ii) வெண்பா என்றால் என்ன? அதன் ஓசையைக் கூறுக.

36. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனை சேர்த்து எழுதுக. 1 × 2 = 2

(i) அமர்ந்து+இல்லாள்

(ii) தொடுத்து+ஆறு

பிரிவு – ஈ

37. பின்வரும் வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும். 3

(i) அறம் செய்தலைப் பற்றி நாலடியார் கூறும் செய்தியை விளக்கு.

38. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க 1 × 2 = 2

(i) ஓசோன் ஓட்டை எதைத் திறப்பது போல இருக்கிறது?

(ii) விசுவாமித்திரன் கோபத்துடன் கூறியது யாது?

39. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 × 5 = 5

(i) 'மனித மரங்கள்' நாடகத்தில் கதைக் கருவை எழுதுக.

(ii) நவீன மின்னணுக் கணினிக் கண்டறியப்பட்டப் பின்னணி வரலாற்றை எழுதுக.

பகுதி – இ – பிரிவு : அ

40. பின்வருவனவற்றுள் இரண்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 2 × 1 = 2

(i) உலகம் யாரை முதன்மையாகக் கொண்டுள்ளது?

(அ) அகரத்தை (ஆ) ஆட்சியை

(இ) இறைவனை (ஈ) ஈகையை



UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR
UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

(ii) கங்கை நதிக்கரையில் பெருமளவில் விளைவது எது?

(அ) கோதுமை

(ஆ) பார்லி

(இ) பாசுமதி

(ஈ) வெற்றிலை

(iii) பல வண்ணங்கள் கலப்பு மணம் செய்து கொண்டதை எவ்வாறு கூறுகிறார்?

(அ) கூட்டணி

(ஆ) வானவில்

(இ) மாலைகள்

(ஈ) பாடல்

41. **எவையேனும் ஒன்றினுக்கு விடையளிக்கவும்.** **1 × 1 = 1**

(i) அஃறிணைப் பெயர் எது?

(அ) சிறுவர்கள்

(ஆ) மரங்கள்

(இ) பண்கள்

(ஈ) அறிஞர்கள்

(ii) ஆசிரியப்பாவின் ஓசை என்ன?

(அ) செப்பலோசை

(ஆ) அகவலோசை

(இ) துள்ளலோசை

(ஈ) தூங்கலோசை

42. **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைக் கண்டறிந்து எழுதுக.** **2 × 1 = 2**

(i) 'எரியும் தருணம்' என்ற கவிதை நூலின் ஆசிரியர் யார்?

(அ) இளம்பிறை (ஆ) இளம்பூரணார்

(இ) வைரமுத்து (ஈ) பாரதிதாசன்



UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR
UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279

(ii) *மிகுந்த செழிப்பின் காரணமாக அரசர் எதில் உலா வருகிறார்?*

*(அ) யானை*

*(ஆ) குதிரை*

*(இ) தேர்*

*(ஈ) காளை*

43. **பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களில் விடையளிக்க.** **1 × 2 = 2**

(i) *காந்தியடிகளின் அரசியல் வாழ்வைக் கூறுக.*

(ii) *இந்தியா 2020 நூல் : விளக்கம் கூறுக.*

44. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** **1 × 4 = 4**

(i) *அசோகனின் ஆட்சிச் சிறப்பை விவரி*

(ii) *'சங்குத்தேவனின் தர்மம்' கதைக் கருவைக் கூறுக.*

45. *சுற்றுச் சூழலைப் பாதுகாக்க ஹைக்கூ கவிதை மூலம் அறிவுமதி கூறும் அறிவுரைகள் யாவை?* **1 × 4 = 4**

UNNATI
EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR



UNNATI EDUCATION
9899-436-384: 9654-279-279